[24th March 1959

Conversion of Ordinary Training Schools into Basic Training Schools

* 965 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு எந்த ஜில்லாவில் எந்தப் பயிற்சிப் பள்ளிகள் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன ?

(ஆ) அவை ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு கிரேடிலும் எத்தனை செக்ஷன்கள் இருக்கின்றன ?

(இ) இந்தப் பள்ளிகளில் போதுமான ஆதாரக் கல்வியில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் இருக்கின்றனரா ?

(ஈ) இல்லையானால், அதன் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) to (ஈ) A statement [a] placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : இன்னும் ஆதாரக் கல்வித் துறைக்கு மாற்றப்படாத பயிற்சிப் பள்ளிகள் எவ்வளவு இருக்கிறது ? அவை எப்பொழுது மாற்றப்படும் ? இப்பொழுது மாற்றியிருக்கிற பள்ளிகளைச் சுற்றிலும் பேஸிக் காம்பாக்ட் வரியா டெவலப் செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் அந்த முயற்சி எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் பாக்கி 27 பயிற்சிப் பள்ளிகள் மாற்றப்படாமல் இருக்கிறது. 1959–60-ல் 16 பள்ளிகள் மாற்றப்படும். பாக்கியுள்ள 11 பள்ளிகள் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட கடைசி வருடத்தில் மாற்றப்படும். பேஸிக் ஸ்கூல்கள் ஆரம்பிப்பது பற்றி தனி கேள்வி போடவேண்டும்.

Medicinal herbs

* 966 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the names of the medicinal herbs that are available in the State; and

(*b*) whether Serpagandhi and Aswagandhi are available?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) A statement [b] is placed on the table of the House.

(*b*) Yes, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR : சர்ப்பகந்தி, அஸ்வகந்தி முதலியவைகள் வெளிராஜ்யங்களுக்கு அனுப்பப்படுகிறதா ? அல்லது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்ப்பகந்தி "வெஸ்டேர்ன் காட்ஸ்"ல்தான் பயிராகிறது. அஸ்வகந்தி கோயம்புத்தூர் ஜில்லாவில் பயிராகிறது. வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறதா என்பதைப் பற்றி தகவல் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த மூலிகைகள் நம் நாட்டில் கிடைக்கிறது என்பதை யார் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏதாவது பழைய புத்தகங்களில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது அந்த அதிகாரி யார் ?

---

a Printed as Appendix I on page 485 infra.

b Printed as Appendix II on pages 486—492 infra.